புதன்கிழமை, 26 ஆகஸ்ட், 2009

# அம்பத்தூரில் ஸ்ரீராமச்சந்திரா பல்கலை.யின் இலவச மருத்துவ முகாம்

**சென்னை, ஆக. 25:** ஸ்ரீராமச்சந்திரா பல்கலைக்கழகமும், தென் இந்திய தொழிற் வர்த்தக சபையும் இணைந்து நடத்தும் இலவச மருத்துவ முகாம், அம்பத்தூர் தொழிற்பேட்டை, உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தொழில்நுட்ப மையத்தில் வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, மகளிர் நலம், மகப்பேறு, குழந்தைகள் நலம், தோல் சம்பந்தப்பட்ட நோய், காது, மூக்கு, தொண்டை, முட நீக்கியல், சர்க்கரை நோய் ஆகிய துறைகளைச் சார்ந்த டாக்டர்கள் முகாமில் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கவுள்ளனர்.

காலை 8.30 மணி முதல் மாலை 4 மணி வரை முகாம் நடைபெறும்.